**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.**
**ஆண்டுப் பட்டிகை வழக்கு எண். 354/2018.**
**வழக்கு சாட்சி – அ.சா. 2 .**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. பாரதிமுருகன். | ஜாதி | |
| தந்தை பெயர் | நாகராஜன். | தொழில் | சிறப்பு காவல் உதவி ஆய்வாளர். |
| கிராமம் | அல்லிநகரம். | சமயம் | |
| தாலுக்கா மற்றும் மாவட்டம் | | வயது | 60/2026. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.03.2026.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்).**

**<u>அரசுத் தரப்பு முதல் விசாரணை:–</u>**

நான் தற்போது, அல்லிநகரம் காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராகப் பணிபுரிந்து வருகிறேன். எங்கள் காவல் நிலையத்தில் ஏற்கனவே பணிபுரிந்த சார்பு ஆய்வளார்கள் திரு. அழகர்சாமி மற்றும் திரு. சதீஸ் ஆகியோர்களது கையெழுத்து எனக்கு நன்கு பரிச்சயம் என்ற அடிப்படையிலும், வழக்குக் கோப்புக்களின் அடிப்படையிலும் நான் சாட்சியமளிக்கிறேன். கடந்த 03.03.2017 ஆம் தேதி சார்பு ஆய்வாளர் திரு. அழகர்சாமி நிலையப் பொறுப்பில் இருந்து, எங்கள் காவல் நிலைய மனு ரசீது எண். 125/2017 –ஐப் பார்வைட்டு, அதன் தன்மைக்கு ஏற்ப காவல் நிலையக் குற்ற எண். 81/2017, சட்டப் பிரிவுகள் 341, 294(b), 323, 324, 506(ii) இதச –ன் கீழ் வழக்குப் பதிவு செய்துள்ளார். அந்தப் புகார் அ.சா.ஆ.2 ஆகும். முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் அன்றைய தினமே மதியம் 01.45 மணிக்கு சம்பவ இடம் சென்று, சாட்சிகள் திருப்பதி மற்றும் முத்துக்குமார் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயாரித்துள்ளார். பார்வை மகசர் அ.சா.ஆ.4 மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் சம்பவயிட சாட்சிகள் 1 முதல்

4 வரையில் உள்ள சாட்சிகளையும், மகசர் சாட்சிகளையும் தனித்தனியாக விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார். பின்னர் காயம்பட்ட செல்லப்பாண்டி மற்றும் சிவராஜ்குமார் ஆகியோர்களுக்கு சிகிச்சை வழங்கிய மருத்துவர் திரு. பாலகிருஷ்ணன் என்பவரை விசாரித்து, காயச் சான்றுகள் பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அந்தக் காயச் சான்றுகள் முறையே அ.சா.ஆ.6 மற்றும் அ.சா.ஆ.7 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் உண்மையெனத் தெரிந்து எதிரியைத் தேடிவந்த நிலையில், எதிரிகள் முன்பிணை பெற்றுவிட்டபடியால், அவரைக் கைது செய்யவில்லை. பின்னர், இவ்வழக்கில் மனு ரசீது வழங்கிய காவல் உதவி ஆய்வாளர் திரு. கண்ணன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர், அவரது விசாரணையை முடித்து எதிரிக்கு எதிராக சட்டப் பிரிவுகள் 341, 294(b), 323, 324, 506(ii) இதச–இன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:–</u>**

அ.சா.1–டம் எழுதாத வெள்ளைப் பேப்பரில் கையொப்பம் மட்டும் பெற்றுக்கொண்டு, வழக்கு சம்பந்தப்பட்ட ஆவணங்கள் பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்துத் தயாரிக்கப்பட்டது என்றாலும், சொன்ன நேரத்தில், வழக்கின் எந்தவொரு சாட்சிகளை சரிவர விசாரணை செய்யவில்லை என்றாலும், ஆஜர் எதிரிக்கு எதிராக தவறாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. இந்த வழக்கிற்கும், எதிரிக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்று சொன்னாலும் சரியல்ல.

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.**

AASAY MARUDHU P

Digitally signed by AASAY MARUDHU P
Date: 2026.03.07 14:40:50 +0530

**நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ.),**
**தேனி.**